**தலைப்பு 12 – தேசிய கல்வி ஆணைக்குழு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆம் ஆண்டு**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ்வரும் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தேசிய கல்வி ஆணைக்குழுவினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்களில் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

## 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்குகள் தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரமாணத்தின் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு விடயப் பரப்பு

---

தலைப்பு 12 – தேசிய கல்வி ஆணைக்குழு 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஆகஸ்ட் 29 ஆந் திகதி ஆணைக்குழுவின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தேசிய கல்வி ஆணைக்குழுவில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் மேற்படி 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காண்பிக்கப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 127 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்படத் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் 127 இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை | | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அதன் ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|---|
| நிதிப்பிரமாணம் | | | | |
| 127(1)(ஆ) | செலவினம் மற்றும் அரச வருமான சேகரிப்பு தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டிற்கும் ஏற்பாடுகள் தயாரிக்கும் தாப்பிக்கும் முறையொன்று தயாரித்துக் கொள்ளப்பட்டுள்தாகவும் வேண்டுமெனவும் | 1 | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்படாமை. | 2.9 |
| | | 2 | மனித வள முகாமைத்துவத்தில் குறைபாடு | 2.10 |
| 127(2) | தமது நிர்வாகத்தின் கீழ் காணப்படும் திணைக்களங்களில் அப்போது இருக்கும் செலவின விடயங்கள் உட்பட புதிதாக அல்லது கூடுதலாக செலவு செய்வதற்கான முன்மொழிவுகள் சிக்கனமாகவும் செயற்திறனான வகையில் அமைச்சில் நுண் பரிசீலனைக்கு உட்படுத்தல் | | பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை | 2.2.1 |

| | | | |
|---|---|---|---|
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் அனைத்தையும் தமது சொந்த நிர்வாக அனுபவத்தையும் தீர்மானத்தையும் அதில் பிரயோகிப்பதற்காக அவருக்கு வழங்கப்படுகின்றதெனவும் | உள்ளகக் கணக்காய்வு அலகு ஸ்தாபிக்கப்படாமை | 2.8 |
| 127(4) | தமது ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தராலும் ஒதுக்கீட்டுக் கணக்குகள் முறையாக சமர்ப்பிக்கப்படுவதாகவும் தாம் அனுப்பி கையொப்பமிடுவதற்கு முன்னர் அமைச்சின் போது பரீட்சிக்கப்பட்டதெனவும் அவ்வாறே மதிப்பீடுகளில் நிதி ஏற்பாடு மற்றும் உள்ளவாறான செலவினத்திற்கு இடையே காணப்படும் கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு தம்மால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்படல் | வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்படாமை | 2.3 |
| 127(5) | அமைச்சின் மதிப்பீடுகளில் நிதிஏற்பாடு மற்றும் செலவினத்திற்கு இடையே உள்ள கருத்திற் கொள்ளக் கூடியளவு வேறுபாடு அமைச்சினால் அழுத்தமாக புலனாய்விற்கு உட்படுத்தப்பட்டதாகவும் | மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமை | 2.7(ஆ) |
| 127(7) | உத்தியோகத்தர்கள் / ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் கடைப்பிடிக்கப்பட்டதாகவும், நிதிப்பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந் நட்டங்கள் தொட்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் /ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்களை விதிப்பதனை கண்காணிக்கும் பொருட்டு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதால் தமக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புக்களிலிருந்து கணக்கீட்டு உத்தியோகத்தர் விடுவிக்கப்பட்டதாக கருதப்படும். அரசாங்க கணக்கு குழுவின் முன் தோன்றுவதற்கும் | நட்டம் மற்றும் இழப்பு | 2.6 |

தாம் பொறுப்பு வகிக்கும் திணைக்களங்களின் கணக்குகளை தெளிவுபடுத்துவதற்கும் நியாயப்படுத்துவதற்கும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுடன் ஒத்துழைத்தலும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கடமைப் பொறுப்பாகும்.

## 2 போதியளவான மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 ஆணைக்குழுவின் கூட்டம் மற்றும் நிறையியற்குழு கூட்டங்களை நடத்துதல்

செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ஆணைக்குழுவின் கூட்டங்கள் மற்றும் நிலையியற் குழு கூட்டங்களில் 12 தடவைகள் வீதம் 24 கூட்டத்தடவைகள் நடாத்தப்பட வேண்டிய போதிலும், ஆணைக்குழுவின் கூட்டத் தடவைகள் 06 உம் நிலையியற் குழுக் கூட்டங்கள் 04 தடவையும் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

### 2.2 செயலாற்றல்

#### 2.2.1 செயற்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

2014 பெப்ரவரி 17 அந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது ஆணைக்குழுவினால் நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட பிரதான பணிகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அந்தந்த மாகாணங்களில் கல்வி முறைமையினை மீளாய்வு செய்வதற்காக சாதாரண கல்விக் கொள்கையின் கீழ் ரூபா 250,000 நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அதன் நிதிசார் மற்றும் பௌதீக செயல்முன்னேற்றம் முறையே 20 சதவீதம் மற்றும் 50 சதவீதம் ஆக இருந்தன.

(ஆ) கொள்கை வழங்குனருக்காக பயன்படுத்தப்படுகின்ற கற்கையின் கீழ் சிங்கள அரிச்சுவடி மற்றும் மொழி பிரயோக விதி தொடர்பான நியமத்திற்காக ரூபா 100,000 தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்தப் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் கொள்கை வழங்கலுக்காக மீள்வலுவூட்டல் மற்றும் செயல் பொறிமுறை ஒன்றைத் தாபிப்பதற்காக 09 குழுக்களை உவாக்குவதற்காக ரூபா 200,000 தொகையான நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், திட்டமிடப்பட்ட பிரகாரம் அந்தப் பணிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சாதாரண கல்விக் கொள்கை முன்மொழிவுகளை தெளிவுபடுத்தும் நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 800,000 நிதிஏற்பாடு மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. இதன் கீழ் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த தெளிவுபடுத்தும் 10 நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) அந்தந்த மாகாணங்களின் கல்வி முறைமைகளை மீளாய்வு செய்வதற்காக ரூபா 250,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மாகாணங்களுக்குரிய 03 திட்டங்கள் பெறப்படாதிருந்ததுடன் 08 குழுக்களுக்கு தெளிவுபடுத்தும் 08 நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் 01 மீளாய்வு கூட்டம் என்பன நடாத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக ரூபா 198,500 தொகை சேமிக்கப்பட்டிருந்தது.

**2.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் ஆணைக்குழுவினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2014 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை அந்த அறிக்கை ஆணைக்குழுவினால் 2018 யூலை 15 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 இன் பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அந்த அறிக்கை சுற்றறிக்கையின் 3.1.6 ஆம் பந்தியின் பிரகாரம் 2018 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் / சுற்றறிக்கையின் பிரகாரம் 3.2.6 ஆம் பந்தியின் பிரகாரம் 2018 யூன் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், ஆணைக்குழுவினால் அந்த அறிக்கை 2018 ஆகஸ்ட் 10 ஆந் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.5 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

ஆணைக்குழுவினால் 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிலையான சொத்துப் பதிவேடு முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

**2.6 நட்டம் மற்றும் இழப்பு**

வான் வாகனமொன்று விபத்திற்குட்பட்டதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்த்தலுக்காக ரூபா 787,256 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் காப்புறுதி மூலம் ரூபா 586,582 தொகை கிடைத்திருந்தது. எஞ்சிய ரூபா 200,674 தொகை ஆணைக்குழுவின் வாகன பராமரிப்புச் செலவினமாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

**2.7 செயற்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளை பயன்படுத்துதல்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டு காலப்பகுதியில் ஆணைக்குழுவிற்கு ஒதுக்கப்பட்டிருந்த நிதிஏற்பாடு பயன்பாடு மற்றும் சேமிப்புக்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் அது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள் என்பன கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டில் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2013 | மீண்டெழுபவை | 27.00 | 25.24 | 1.76 | 6.52 |
| | மூலதனம் | 4.05 | 2.62 | 1.43 | 35.31 |
| | **மொத்தம்** | **31.05** | **27.86** | **3.19** | **10.27** |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2014 | மீண்டெழுபவை | 31.58 | 28.88 | 2.70 | 8.55 |
| | மூலதனம் | 5.45 | 3.97 | 1.48 | 27.16 |
| | **மொத்தம்** | **37.03** | **32.85** | **4.18** | **11.28** |
| 2015 | மீண்டெழுபவை | 37.86 | 30.76 | 7.10 | 18.75 |
| | மூலதனம் | 6.20 | 1.63 | 4.57 | 73.71 |
| | **மொத்தம்** | **44.06** | **32.39** | **11.67** | **26.49** |
| 2016 | மீண்டெழுபவை | 36.50 | 31.46 | 5.04 | 13.81 |
| | மூலதனம் | 4.65 | 2.18 | 2.47 | 53.12 |
| | **மொத்தம்** | **41.15** | **33.64** | **7.51** | **18.25** |
| 2017 | மீண்டெழுபவை | 35.50 | 30.80 | 4.70 | 13.24 |
| | மூலதனம் | 4.15 | 2.43 | 1.72 | 41.45 |
| | **மொத்தம்** | **39.65** | **33.23** | **6.42** | **16.19** |

மீளாய்வாண்டு தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமை**

07 செலவின விடயங்களுக்காக ரூபா 1,380,683 கூட்டுமொத்தமான மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அந்த செலவின விடயத்திற்குரிய நிதிஏற்பாடுகளில் கூட்டுமொத்தமாக ரூபா 1,821,317 தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டமையினால் சேமப்பு ஒதுக்கப்பட்ட தேறிய நிதிஏற்பாட்டில் 30 சதவீதம் முதல் 80 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

## 2.8 உள்ளகக் கணக்காய்வு

ஆணைக்குழு ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பம் முதல் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2009 யூன் 29 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஆகக்குறைந்தது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் காலாண்டிற்கு ஒரு தடவை வீதம் நடாத்தப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டிற்காக ஒரு குழுக் கூட்டம் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

## 2.10 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான மற்றும் வெற்றிடமான பதவியணியினர் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக ஆணைக்குழுவினால் ஆளணி வேதன செலவின தொகுதிக்காக ரூபா 19.8 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நபரொருவருக்கான வருடாந்த செலவினம் ரூபா 682,681 ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 12 | 07 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 11 | 03 | 08 |
| (iii) | இரண்டாம் நிலை | 10 | 07 | 03 |
| (iv) | ஆரம்ப நிலை | 12 | 12 | - |
| | மொத்தம் | 45 | 29 | 16 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிரேஷ்ட நிலையின் பதவியொன்றிற்கான மேலதிக செயலாளர் பதவி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறை இதுவரை அங்கீகரிக்கப்படாமையின் அடிப்படையில் ஆட்சேர்ப்பினை மேற்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) சிரேஷ்ட நிலையின் பதவியொன்றான கணக்காளர் பதவி மற்றும் மூன்றாம் நிலையின் பதவியான அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி என்பவற்றுக்காக ஆட்சேர்க்கும் நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் ஆட்சேர்ப்பு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

**(இ) பதவியணியினருக்குப் பயிற்சியளித்தல்**

பதவியணியினருக்கான ஒழுங்கு முறையாக பயிற்சியளித்தல் தேவையாக இருந்ததுடன் ஆணைக்குழுவினால் அதன் பதவியணியினருக்கான பயிற்சியளித்தல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மனிதவள அபிவிருத்தி செயற்பாடுகளின் அடிப்படையில் பதவியணியினர் பயிற்சிக்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 1,000,000 ஆக இருந்ததுடன் அதன் உள்ளபடியான செலவினம் ரூபா 736,159 ஆகும். ஆகக் குறைந்தது ஆண்டொன்றிற்கு 08 மணித்தியாலங்களேனும் பயிற்சி பெறாதவர்களின் எண்ணிக்கை 13 ஆகக் காணப்பட்டது.

(ii) கடந்த 05 வருடங்களில் பயிற்சியளித்தல் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்ட அளவை ஒப்பீடு செய்த போது 2014 ஆம் ஆண்டின் போது நிதிஏற்பாட்டில் 25 சதவீதமாகக் காணப்பட்ட சேமிப்பு 2016 ஆம் ஆண்டில் 72 சதவீதம் வரை அதிகரித்திருந்ததுடன் மீளாய்வாண்டின் போது 26 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.11 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

(அ) நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 ‘‘நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களும் செயற்பட வேண்டியிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரியதாக தேசிய கல்வி ஆணைக்குழுவினால் தமது விடயப்பரப்பின் கீழ் காணப்படுகின்ற இலக்குகள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டியுள்ளது என அறிவிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆண்டு 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக தேசிய கல்வி ஆணைக்குழுவினால் தெளிவுபடுத்தப்படாமையின் காரணமாக அதன் பணிகள் தொடர்பான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைய வேண்டிய கட்டங்களை இலக்கின் அடிப்படையில் அடையப்பட்டதை அளவீடு செய்வதற்கான குறிகாட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.